பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 16௳ (2 12—67) சனி வெளியூர்: கார்த்திகை 17௳ (3—12—67) ஞாயிறு [இதழ்: 142

டில்லி அரங்கம்-6

முதல்முறையல்ல-- மூன்றும் தடவை!

அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் பதவி பிச்சைப் பொருளாகிவிட்டது! பெறுபவர்கள், பிச்சைக்காரர்களாகிவிட்டார்கள்! கொடுப்பவர்களோ, மாமியார்—மருமகளாகிவிட்டார்கள்!

"அவள் என்ன சொல்வது—'இல்லை' என்று? இங்கே வா; நான் சொல்லுகிறேன்—'இல்லை; போ'" என்றாளாம்—மருமகள் மீது ஆத்திரம் அடைந்த மாமியார்—வீதியில் வந்த பிச்சைக்காரனிடம்!

காங்கிரசிலும் இதே கதை, 'உடன்பாட்டு' இலக்கணத்தில் திருப்பிப் படிக்கப்பட்டிருக்கிறது!

"இந்திரா என்ன—'நீங்கள் தலைவராக இருங்கள்' என்று சொல்வது? இங்கே வாருங்கள்; நான் சொல்கிறேன்—'நீங்கள் தான் தலைவராக இருக்கவேண்டும்'" என்று நிஜலிங்கப்பாவைக் கூப்பிட்டுச் சொல்லி அனுப்பியிருக்கிறார்—கொதிப்படைந்த நிலையில் இருக்கும் காமராசர்!

இதைச் சொல்லி முடிப்பதற்கு, 6-தடவைக்கு மேற்பட்ட சந்திப்புகள்! காலையில் பார்த்தால், 'மாலையில் சொல்லுகிறேன்' என்ற அறிக்கை! மாலையில் கேட்டாலோ, 'காலையில் பார்க்கலாம்' என்ற பதில்! காமராசரின் அரசியல், கடந்த இரண்டு நாட்களாகப் பத்திரிகை உலகத்தை, இப்படிப் படாதபாடுபடுத்தியிருக்கிறது!

ஆனால், பத்திரிகைகளும் அவரை விட்டுவைத்ததாகத் தெரியவில்லை! 'தொட்டால் சுருங்கட்டும்' என்று தெரிந்தும், அந்தச் செடியைத் தொட்டுத் தொட்டுச் சுருங்கவைத்து வேடிக்கை பார்க்கும் மனிதப் போக்கு உண்டல்லவா? 'காமராசர் கடுகடுப்பாக இருக்கிறார்' என்று தெரிந்தும், அவரது சீற்றத்தை—சினத்தை—சிடுசிடுப்பைக் கிளறிக் கிளறி, விஷயத்தை உண்டாக்கியிருக்கிறார்கள் செய்தியாளர்கள்!

இத்தனை ஆண்டுகள் பொதுவாழ்வு அனுபவம் கொண்ட காமராசர், இப்படி உணர்ச்சிகளை—அதுவும் பத்திரிகைக்காரர்களிடம்—காட்டிக்கொள்ளும் அளவுக்கு இராசதந்திரம் தெரியாதவராக இருந்திருக்கிறார் என்பது, ஆச்சரியப்படத்தக்க உண்மையாக இருக்கிறது!

சிறிது விரசமாக இருந்தாலும், நன்றாகப் புலப்படும்வகையில் சொல்லுவதென்றால், பழத்தைத் தின்றுவிட்டுத் தோலை வீசி எறிவது போல், காமராசரை இந்திரா—தலைவர் தேர்தல் விவகாரத்தில்—திட்டமிட்டு அலட்சியப்படுத்தி இருக்கிறார்!

ஆனால் ஊன்றிக் கவனித்துவரும் அரசியல் பார்வையாளர்களுக்கு, இது புதிய நிகழ்ச்சியாகத் தோன்றாது! 'தரத்தில் உச்சக் கட்டமான ஒரு சம்பவம்' என்றுதான் இதனைச் சொல்லலாமே தவிர, காமராசர் இப்படி தகுதிக்குறைவாக அலட்சியப்படுத்தப்பட்டிருப்பதில், இது, **மூன்றும் தடவை!**

நடந்த பொதுத் தேர்தலுக்குப்பின் இந்திரா, இரண்டாம் முறையாக அமைச்சரவை அமைத்தார்; அவரை முதன் முதலில் தலைமையமைச்சராக ஆக்கிவிட்ட காமராசரிடம் அமைச்சரவைப் பட்டியலைத்தான் காட்டினாரே தவிர, பட்டியல் தயாரிக்கும்போது அவரை, தூர ஒதுக்கித்தான் வைத்திருந்தார் வழக்கம்போல் சந்தித்த செய்தியாளர்களிடம் அவரும் வாடிக்கையாக -- வெளிப்படையாகக் கொட்டிவிட்டார்—'அமைச்சரவை பற்றி என்ன கூறுகிறீர்கள்?' என்று கேட்கப்பட்டதற்கு, காமராசர்—'படிக்கவில்லை' என்ற பொருள் தொனிக்க—**'பட்டியலைப் பார்த்தேன்'** என்று மட்டுமே சொல்லி நிறுத்திவிட்டார்!

காமராசருடைய பங்கு இல்லாமல், இந்திரா தயாரித்துக் கொண்ட பட்டியல் அது!

'கட்சியின் தலைவராயிற்றே' என்ற ஒரே அடிப்படையில்—கடைசி நிமிடத்தில்—ஒப்புக்காக அவரிடம் காட்டிவிட்டு, பட்டியலை வெளியிட்டார்!

இது காமராசரிடம் இந்திரா காட்டிய முதல் அலட்சியம்!

இப்போது பிரபலமாகியிருக்கும் வங்காளத்து நிகழ்ச்சிகளுக்கு முதன்முதலில் 'பிள்ளையார் சுழி' போட்டவர், காங்கிரசுத் தலைவர் தேர்தலுக்கும் வேட்பாளராக நின்ற முன்னாள் உள்துறை அமைச்சர் குல்சாரிலால் நந்தா!

அவரை, வங்காளத்திற்குச் சென்று கட்சி நிலைமையைக் கண்டறிந்து வரச் சொல்லியதுடன் இல்லாமல், தனது நிர்வாக வசதிகளுக்காக அங்கே இருந்த மாநில கட்சி அமைப்பையும் கலைக்கச் சொல்லி தனிப்பட்ட வகையில் உத்தரவு கொடுத்தவர் இந்திரா!

இதுவும் காமராசரைக் கலந்தாலோசிக்காமல், காமராசரிடம் இந்திரா காட்டிய இரண்டாவது அலட்சியம்!

இங்கே—தமிழகத்தில், கிராமப்புற மக்களைத் தி. மு. கழகத்துக்கு எதிராகத் திசை திருப்பிவிடுவதற்குப் பட்டிதொட்டிகளில் சுற்றிக்கொண்டிருக்கும்போதுதான் காமராசர், பத்திரிகைகளைப் பார்த்து மட்டுமே வங்காளத்துக் காங்கிரசு கலைக்கப்பட்ட செய்தியை அறிந்தார்!

இந்த இரண்டின் அடுத்த கட்டமாக ஒரு உச்சக்கட்ட அலட்சியத்தை இப்போது அவர் தேர்தல் விவகாரத்தில், காமராசர் அனுபவித்திருக்கிறார்!

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

'சீனக் குரங்கு'களும் இந்தியக் கவர்னர்களும்!

கணுங்கோவின் வர்ணனை!

"இந்தியாவில் கவர்னராக இருப்பவர்கள், சீனப் பழமொழியில் வரும் மூன்று குரங்குகளைப்போல் குருடர்களாக — செவிடர்களாக — ஊமைகளாக இருக்க வேண்டும்!

"அது மட்டுமல்ல —அதற்கு மேற்கொண்டும் ஒன்று சொல்லுவேன், இந்தியாவில் கவர்னர்களாக இருப்பவர்கள், தீயவைகளைப் பற்றி மட்டுமல்ல எதைப் பற்றியுமே பேசாமல் -- கேளாமல் -- பார்க்காமல் இருக்கவேண்டும்; இதுதான், கவர்னர்களுக்குள்ள இலக்கணம்!"

இவ்வாறு கூறியிருப்பவர் பீகார் மாநிலத்திற்குக் கவர்னராக நியமனம் பெற்று—வருகிற 7-ம் நாளன்று பதவிப் பொறுப்பு ஏற்கவிருக்கும் நித்தியானந்த கணுங்கோ ஆவார். இப்போது அவர் குசராத்தின் கவர்னராக இருக்கிறார்.

பீகாருக்குக் கவர்னராக அவர் வருவதை, பீகார் அமைச்சரவை எதிர்த்துத் தீர்மானமே போட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அதுபோலவே, பாட்னா நகருக்கு வருகைதரும் அவரை, பீகார் அமைச்சரவை அதிகாரபூர்வமாக வரவேற்காது! மனிதாபிமான அடிப்படையில், முதலமைச்சர் மட்டும் சென்று வரவேற்க இருக்கிறார்!

இப்போது கவர்னராக இருந்து ஓய்வுபெறும் அனந்த சயனம் அய்யங்கார், கவர்னர்கள் சர்வாதிகாரிகளாக மாறுவது பற்றியும் அவர்களை மத்திய அரசு, எதிர்க் கட்சி மாநில அரசுகளை ஒடுக்கப் பயன்படுத்துவது பற்றியும் பாட்னாவில் இரு நாட்களுக்கு முன் கூறியிருப்பது, இங்கு நினைவுகூரத் தக்கது.

புதிய கவர்னர் கணுங்கோ கூறியிருக்கும் சீனப் பழமொழியில் வரும் மூன்று குரங்குகளும், 'காந்தியடிகளுக்குப் பிடித்த ஓர் அடையாளம்' என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

காதில் விழுந்தது!

"'சங்லி' தெரியுமா?

"ஆமாம்; அங்கேதான், வரும் சனவரித் திங்களில் அனைத்திந்தியக் காங்கிரசு மாநாடு நடக்கப்போவதாகப் பத்திரிகையில் பார்த்தேன்."

"அந்த இடத்தில், நேற்று போலீசார் தடியடி நடத்தியிருக்கிறார்கள்; 'ரேஷன்' கடைகளுக்கு முன்னால் மக்கள் போராட்டமாம்—'அதிக அளவு தரவேண்டும்' என்று!"

"சரி! போலீசுத் தடியடிக்கும்—காங்கிரசு மாநாட்டுக்கும் என்ன சம்பந்தம்?"

"இப்போது தொடர்பு ஒன்றுமில்லை; அப்போது—சனவரியில் — பார்! இது போன்று விசேடச் செய்தி ஏதாவது கிடைக்கும்!"

கருநாடகத்தில் மாணவர்களின் இந்தி எதிர்ப்பு!

"கருநாடக மாநிலத்திலுள்ள இராபர்ட் சன்பேட்டையிலுள்ள உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியுள்ளதை எதிர்த்தும், அதனைக் கற்க விரும்பாதவர்களின் மீது அதனைத் திணிப்பதைக் கண்டித்தும், தங்கள் வகுப்பறைகளிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்" என்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

டில்லி அரங்கம்—7

நிஜலிங்கப்பா-- உண்மை நிலை என்ன?

★

4—12—67 'நம் நாடு' இதழில் இடம்பெறும்

சனநாயகம் நசுக்கப்படுகிறது-- சர்வாதிகாரம் உருவாகிறது!

மக்களவையில் இரா. செழியன் கடும் குற்றச்சாட்டு

புதுடில்லி, டிச. 1—

"காங்கிரசல்லாத அரசுகள் நடந்துவரும் மாநிலங்களில், தந்திரங்கள்—சூழ்ச்சிகள் மூலம், மக்களின் தீர்ப்பு மீறப்பட்டு வருகிறது; தொடர்ந்து இச்செயல் நடைபெறுமாயின், சனநாயகம் நசுக்கப்பட்டு தீவிர சர்வாதிகாரம் ஏற்பட்டுவிடும்"

இவ்வாறு மக்களவையில், மேற்கு வங்க அரசியல் நிலைமை குறித்து நடைபெற்ற விவாதத்தின்மீது பேசுகையில், கழக உறுப்பினர் இரா. செழியன் சுட்டிக்காட்டி எச்சரித்தார்.

'மேற்கு வங்கக் கவர்னரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும்' என்று குடியரசுத் தலைவருக்குச் சிபாரிசு செய்யும் எதிர்க் கட்சியினரின் பிரேரணைமீது அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சட்டமன்றத்தின் உரிமையை மேற்கு வங்கக் கவர்னர் சிதைத்திருக்கிறார்; சரியான வழியில் சிந்திப்பவர்களின் உள்ளத்தில் இதனால் பெரும் அச்சம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது!

"அரியானா, பஞ்சாப், மேற்கு வங்கம் ஆகிய மாநில கவர்னர்கள், காங்கிரசல்லாத அமைச்சரவைகளைக் கவிழ்ப்பதில் பெரும் 'விஷமங்கள்' செய்திருக்கிறார்கள்!

"மக்களின் தீர்ப்புக்குப் பணிந்து நடக்கவேண்டுமா அல்லது சனநாயகக் முறைகளை மாசுபடுத்த கவர்னர்களை அனுமதிக்க வேண்டுமா என்பது பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது!"

இவ்வாறெல்லாம் விளக்கிக் கூறிய இரா. செழியன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சி மாறும் போக்கை கண்டித்துப் பேசுகையில், தெளிவானதோர் நிலைமையை சுட்டிக்காட்டினார்:—

"இந்த நிலையை, காங்கிரசுதான் துவக்கிவைத்தது; முதலாவது பொதுத் தேர்தலுக்குப்பின், கட்சி மாறியவர்களின் உதவியுடன் அது, தமிழகத்தில் அமைச்சரவை அமைத்தது!

"எல்லா மாநிலங்களிலும் காங்கிரசு அமைச்சரவைப் பதவியில் இல்லை என்ற தற்போதைய நிலையில், வெவ்வேறுவிதமான 'அளவுகோல்'கள் கையாளப் படுகின்றன!"

[திரு. இரா. செழியன் அவர்கள் இதற்குமுன், மக்களவையில், மத்திய அமைச்சரவை மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது ஆற்றிய உரையில், கவர்னர்களின் எதேச்சாதிகாரப் போக்கினை விவரித்து ஆற்றிய உரையின் முழு விவரமும், 2, 3, 4-ம் பக்கங்களில் வெளியாகியுள்ளன.]

துக்கத்திலும் அவமானத்திலும் வங்கத்தை ஆழ்த்தினர்!

பிரேரணையைக் கொண்டுவந்த இரேன் முகர்ஜி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அதிகாரத்தை ஏகபோகமாக அனுபவிக்கவேண்டும் என்று ஒரு பிரிவினர் கொண்டுள்ள எதேச்சாதிகாரமான விருப்பம் எந்த அளவுக்குப் போக முடியும் என்பதையே வங்கக் கவர்னரின் செயல் எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது!

(4-ம் பக்கம் பார்க்க)

அரசியல் சட்டம் அர்த்தமற்றதாக ஆக்கப்பட்டிருக்கிறது!

தேவையற்ற நிலைமையிலும் அதிகாரங்கள் தாறுமாருகப் பயன்படுத்தப்படுகின்றன!

அனைத்துக்கும் சூத்திரதாரியாக மத்திய அமைச்சரவை இயங்குகிறது!

ஆதாரங்கள் பல காட்டி நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் இரா. செழியன் குற்றச்சாட்டு

புதுடில்லி, நவ. 29—

"இந்தியாவின் அரசியல் தரம்—அரசியல் நேர்மை—அரசியல் ஒழுங்குமுறை—இவை யாவும், மிக மோசமான கீழ்த்தர நிலைமைக்கு மத்திய அரசாங்கத்தில் கோலோச்சும் ஆளுங் கட்சியால் கொண்டுவரப்பட்டுள்ளன.

"சில மாநிலங்களில், சனநாயக முறைகளில் மக்களுக்குள்ள நம்பிக்கை சிதறடிக்கப்பட்டுள்ளது ; சனநாயகம் ஏமாற்றப்பட்டுவிட்டது !

"சில இடங்களில் அரசியல் சட்டம் அர்த்தமற்றதாகவும், சட்டமன்றங்கள் கேலிக்குரியனவாகவும் ஆக்கப்பட்டுள்ளன !

"மிகவும் சஞ்சலத்தைத் தரும் மற்ெருரு பகுதி என்னவென்ருல், சில மாநிலங்களில் கவர்னர் பதவி மத்திய அமைச்சரவையின் கருவியாகி, ஆளுங் கட்சிக்குச் சாதகமான சந்தர்ப்பங்களையும், தந்திரங்களையும் மாநிலங்களில் உருவாக்கப் பயன்பட்டுள்ளது !

"அருவருக்கத்தக்க இந்த விளையாட்டு இந்திய அரசியலைப் பாழடித்து—அழுகடித்து—தாழ்நிலைக்குத் தள்ளிவிட்டது !"

இவ்வாறு நாடாளுமன்றத்தில், மத்திய அமைச்சரவையின்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில், தி. மு. கழக உறுப்பினர் தோழர் இரா. செழியன் அவர்கள் துவக்கத்தில் சுட்டிக்காட்டிவிட்டுத் தொடர்ந்து பேசுகையில், மேற்கோள்கள் பலவற்றை எடுத்துரைத்தார் ; அவரது உரையின் முழு விவரமும் இங்கு தரப்படுகிறது :—

விசித்திரமான புதிய முறை நாட்டில் தலைதூக்கி வருகிறது !

பொதுத்தேர்தலுக்குப்பின் காங்கிரசுக் கட்சியின் சரிவு தொடங்கியது ; மத்திய அவையில் அதன் பலம் குன்றியது ; மாநிலங்கள் பலவற்றில் ஆட்சிபீடத்திலிருந்து அது வெளியேற்றப்பட்டது !

சனநாயக முறையில், எதிர்க்கட்சி ஆளுங் கட்சியாகும் வாய்ப்பிருக்கிறது ; சட்டமன்றத்தில் சிறுபான்மைக் கட்சி பெரும்பான்மைக் கட்சியாக மாறலாம் ; இத்தகைய மாறுதலைப் பெற, தேர்தல் முறை வகுக்கப்பட்டுள்ளது.

போட்டியிடும் கட்சிகள் மக்களை அணுகவேண்டும்—தங்கள் திட்டங்களை விளக்கவேண்டும்—தேர்தலில் ஈடுபட வேண்டும்—மக்களின் வாக்குகளைப் பெறவேண்டும்—சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெறவேண்டும்—ஆளுங் கட்சியாக ஆகவேண்டும்—'சனநாயக சட்டமன்ற முறை என்பது இவ்வாறு இருக்கவேண்டும்' என்று நாம் இதுகாறும் நினைத்து வந்தோம் !

இந்தியாவில் இப்போது விசித்திரமான புதிய முறை தலைதூக்கிவருகிறது ! ஆட்சிப்பீடத்தை அடைய ஒரு கட்சியோ, கும்பலோ நினைத்தால் — மக்களையோ, தேர்தலையோ, ஒட்டு முறையைப் பற்றியோ கவலைப்படுவதில்லை ! இவைகளையெல்லாம் விட்டுவிட்டு, 'கவர்னரைப் பிடித்தால் போதும் — காரியம் வெற்றிபெற்றுவிடும்' என்று ஆரம்பித்துவிட்டார்கள் !

தேர்தல் முறை அனைத்தும் பின்னுக்குத் தள்ளப்பட்டன !

சனநாயகத் தேர்தல் முறைகளையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு, 'ஆளுங் கட்சி எது' என்று நிர்ணயிக்கும் உரிமையைக் கவர்னர் இன்று சில மாநிலங்களில் ஆக்கிரமித்துக்கொண்டு விட்டார்.

அந்தக் கவர்னர்களுக்கு உபதேசம் புரிந்தும், உத்தரவு தந்தும் மத்திய அரசாங்கம், மாநிலங்களின் ஆட்சியை நிர்ணயித்து வருகிறது !

கவர்னருக்குச் சில விசேட அதிகாரங்கள் அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ளன. எதிர்பாராத நெருக்கடிகளும், அவசர நிலைமைகளும் உருவானுல், அரசாங்கத்தை நடத்திச் செல்ல அந்த விசேட அதிகாரங்கள் தரப்பட்டன.

இப்பொழுது, தேவையற்ற நிலைமைகளில்கூட, அந்த அதிகாரங்கள் தாறுமாருகப் பயன்படுத்தப்படுகின்றன ! அமைச்சரவைகளை மாற்றுவதிலும், சட்டமன்றங்களைக் கலைப்பதிலும, கூட்டத் தேதிகளைக் குறிப்பதிலும், மாநிலத்துக்கு மாநிலம் மாறுபாடு காட்டப்படுகிறது ! சமயத்துக்குச் சமயம் தந்திரம் வேறுபடுகிறது ! எல்லாவற்றிற்கும் சூத்திரதாரியாக மத்திய அமைச்சரவை இயங்குகிறது !

சர்வாதிகார ஆட்சி உருவாவதற்கு வாய்ப்பா ?

கவர்னரின் பதவிபற்றிய விவரங்கள் அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்ட நேரத்தில், அரசியல் நிர்ணய சபையில் இருந்த சிலர், 'கவர்னர் பதவி எதிர்காலத்தில் எவ்விதம் பயன்படும்' என்பதுபற்றிக் கவலைப்பட்டனர் !

கூட்டாட்சி முறையில், மத்திய அரசாங்கம்-மாநில அரசுகள் என்ருகி இயங்கும்பொழுது, கவர்னர் பதவி எவ்வாறு ஆகும் என்பது குறித்து அவர்களுக்கு அச்சம் மூண்டது !

1939 மே 30-ல் அரசியல் நிர்ணய சபையில் பேசிய பண்டித எச். என். குன்சுரு அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"ஒன்றை மிக முக்கியமாக நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் ; இந்த அரசியல் சட்டத்தின்கீழ், சனநாயக முறைக்கு முழுமையாக—சுதந்தரமாக வளர்ச்சி கிடைக்க வேண்டுமே தவிர, நாட்டில் சர்வாதிகார ஆட்சி உருவாக வாய்ப்பு தரக்கூடாது !

"மாநில அரசாங்கத்தைவிட மத்திய அரசாங்கத்திடம் அதிக நம்பிக்கை வைத்து, நாம் சட்டதிட்டங்களை அமைக்கிருேம்; முதலாவதாக—மாநில அரசாங்கங்களை வெறும் அடிமைளாக ஆக்குவது சரியல்ல ; இரண்டாவதாக — இப்பொழுதுள்ள படியே நிலைமைகள் என்றென்றைக்கும் இருக்கும் என்று கூற முடியாது ; மாநில அரசுகள் சிலவற்றிடம் வைக்கப்படும் நம்பிக்கை, மத்திய அரசாங்கத்துக்குக் கிடைக்காமற்போகும் காலம் வரக்கூடும்.

"மாநில அரசாங்கங்களைக் கட்டுப்படுத்தி, அடக்கிவைக்கும் வாய்ப்புக்களை மத்திய அரசாங்கத்துக்குத் தந்துவிட்டால், நாடு சர்வாதிகாரத்துக்கு ஆட்படும் பேராபத்து விளையும்."

அன்றிருந்த நம்பிக்கை இன்று இருக்கிறதா ?

திரு. பிஸ்வநாத் தாஸ், இன்னும் வெளிப்படையாக, 'கவர்னர் பதவி ஆளுங்கட்சிக்கு அனுகூலமாகப் பயன்படும்' என்பதை எடுத்துக் காட்டினுர்.

திரு. தாஸ், ஒரிசா மாகாணத்தில் காங்கிரசு முதலமைச்சராக இருந்தவர் ; அரசியல் நிர்ணய சபையில் அவர் கூறியதாவது :—

"மத்திய அரசாங்கத்தில் ஒரு கட்சியும், மாநிலத்தில் மற்ெருரு கட்சியும் ஆளுங்கட்சிகளாக வரக்கூடும் ; அப்பொழுது என்ன நிலைமை உருவாகும் ?

"மாநிலத்துக்கு அரசியல் சட்டப்படி கவர்னரை நியமிக்கும்பொழுது, அது, தலைமையமைச்சரின் ஆலோசனையின்பேரில் செய்யப்படும். தலைமையமைச்சர் மற்ருேர் அரசியல் கட்சியின் தலைவராக இருப்பார். இப்பொழுதுள்ள தலைமையமைச்சர் உயர்ந்தவர் — பெருந்தன்மை உள்ளவர் ; அவரிடம்—(பண்டித ஜவகர்லால் நேருவிடம்)—நேர்மையை எதிர்பார்க்கலாம் ; கவர்னர் பதவியை, கட்சி நலத்துக்குப் பயன்படுத்த அவர் முன்வரமாட்டார் ; ஆனுல், பின்னுல் வருகின்ற தலைமையமைச்சர், அமைச்சர்கள் இதேபோல் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது ; சொந்த நலம்—கட்சி நலம் குறுக்கிடலாம்.

"மாநில அமைப்பில், சனநாயகம், எதேச்சாதிகாரம் இரண்டும் கலந்துள்ளன ; உள்ளங்காலிலிருந்து கழுத்துவரை சனநாயகம் — ஆனுல், கழுத்துக்கு மேல் தலைப் பகுதி மட்டும் எதேச்சாதிகாரம் !

"நான் பொறுப்பேற்றிருந்த ஒரிசா மாநிலத்தில், எனது கட்சியை உடைக்கக் கவர்னர் எவ்வளவு முயன்ருர் என்பது எனக்குத் தெரியும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஏஜெண்டாகக் கவர்னர் என்ன செய்தாரோ, அதே விதத்தில் வருங்காலத்தில்—ஒரு கட்கியின் பாதுகாப்புக்காக—கவர்னர் பதவி பயன்படக்கூடும் ; ஆனுல் எனது தலைவர்கள் அவ்வளவு கீழ் நிலைக்குத் தாழ்ந்து போகமாட்டார்கள் என்பதில் எனக்கு முழு நம்பிக்கையிருக்கிறது.

நிலைமையும் மாறிவிட்டது ! தலைவர்களும் மாறிவிட்டனர் !

திரு. பிஸ்வநாத் தாஸ் இந்த நம்பிக்கையை, 1949-ல் அரசியல் நிர்ணய சபையில் தெரிவித்தார் ; கவர்னருக்குள்ள விசேட அதிகாரங்கள் தவருகப் பயன்படுத்தப்படமாட்டாது என்றும், தலைவர்கள் தாழ்நிலைக்குச் செல்லமாட்டார்கள் என்றும் அவர் நம்பினுர் !

18 ஆண்டுகள் கடந்துவிட்டன —நிலைமை மாறிவிட்டது ! தலைவர்கள் மாறிவிட்டனர் ! அதிகாரத்தைக் கைப்பற்ற—எதிர்க் கட்சிகளை வீழ்த்த எந்த வழி கிடைத்தாலும்—அது தாழ்நிலை என்ருலும், தவருன போக்கு என்ருலும்—எதைப் பற்றியும் கவலைப்படாமல் செயல்படும் துணிவு இப்பொழுதுள்ள காங்கிரசுத் தலைவர்களுக்கு வந்துவிட்டது !

சொன்னது நடக்கிறது ?

அரசியல் சட்டத்தில் உள்ளது மட்டும் கவர்னர் பதவியை வரையறுத்துவிடாது. விசேட அதிகாரங்கள் இருக்கிறபொழுது—கவர்னரின் மனப்போக்கைப் பொறுத்து – நல்லதோ கெட்டதோ கிடைக்கும்; இதை, திரு. பி. ஜி. கெர் அவர்கள், அரசியல் நிர்ணய சபையில் சுட்டிக்காட்டினுர் :—

"கவர்னர் நல்லவராக இருந்தால், மாநிலத்துக்கு நல்ல காரியங்கள் கிடைக்கும். கவர்னர் தவருன மனப்போக்கில் இருந்தால், மாநிலத்துக்குப் பல சங்கடங்களைத் தர அவரால் முடியும்."

கவர்னரின் போக்கால் விளையும் விபரீதங்கள் !

'விசேட அதிகாரங்கள்' என்று தந்துவிட்ட பிறகு, 'சனநாயக முறைப்படி எல்லாம் நடைபெறும்' என்று எதிர்பார்க்க முடியாது ! கவர்னருடைய தனிப்பட்ட விருப்பு -- வெறுப்புகளை — ஆலோசனை -- தூண்டுதல்களைப் பொறுத்து ஆட்சி நடைபெறும் !

அரசனுடைய ஆட்சிக்கும்—சனநாயக ஆட்சிக்கும் உள்ள முக்கிய வேறுபாடு இதுதான்—

அரசன் அநீதியான ஆட்சி நடத்தினுல், மக்கள் அவதிப்படுவார்கள் !

சனநாயகத்தில் அநீதியான ஆட்சி நடந்தால், ஆட்சியில் இருப்பவர்களை மக்கள் அகற்றிவிடுவார்கள் !

கவர்னர் தமது விசேட அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தினுல், அவரை அகற்றும் அதிகாரம் நம்மிடம் இல்லை !

'கவர்னர் செய்தது தவறு' என்று நீதிமன்றத்தில் முறையிடவும் முடியாது !

'கவர்னர் செய்வதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது' என்று அரசியல் சட்டத்தின் 163-வது பிரிவு தெளிவாகக் கூறுகிறது.

திரு. பி. ஜி. கெர் கூறியது போல், கவர்னர் நல்லவராக இருந்தால், நல்ல காரியங்கள் நடைபெறும் ; கவர்னர் மாறுபட்டிருந்தால்—இன்னும் கூறப்போனுல், மத்திய ஆடசியிடமிருந்து கெடுதலான யோசனைகள் தரப்பட்டு அதன்படி அவர் நடந்துகொண்டால்—ஆட்சி அலங்கோலமாகும் ! மக்கள் அவதிப்படுவர் ! மாநிலம் சீர்குலையும் ! சனநாயகத்துக்கு மரண அடி கிடைக்கும் !

சோக நாடகத்தின் முதல் அங்கம் துவங்கியது அங்கே !

அரியானுவில் — வங்காளத்தில் —பஞ்சாபில் நடைபெற்றவை, தனிப்பட்ட சம்பவங்களல்ல ; ஒரு சோக நாடகத்தின் தொடர் காட்சிகளாகும் ! சனநாயகத்தைச் சாகடிக்கும் சதிக் கூட்டத்தின் மர்மக் கதை, நாடகக் காட்சியாக வெளிப்பட்டுள்ளது !

இந்த அமைச்சரவை பதவியேற்று 1967 மார்ச் 13-ந் தேதி கூடிய முதல் கூட்டத்திலேயே, சனநாயகத்துக்கு விரோதமான முதல் முடிவு எடுக்கப்பட்டது. இராஜஸ்தானில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது ; சட்டமன்றம் தள்ளிவைக்கப்பட்டது !

சோக நாடகத்தின் முதல் அங்கம்—முதல் காட்சி, இராஜஸ்தானில் துவங்கியது !

இராஜஸ்தானில் 184 பேர்கள் உள்ள சட்டமன்றத்தில், காங்கிரசு சார்பில் 88 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்றத்திற்கு வந்தனர். காங்கிரசுக் கட்சியின் தலைவர் சுகாதியா, 'அமைச்சரவை அமைக்க என்னுல் இயலாது' எனத் தெரிவித்துவிட்டார். இதன் பிறகு, எதிர்க் கட்சிகளை அழைத்து அமைச்சரவை அமைக்குமாறு கவர்னர் கேட்டிருக்க வேண்டும் ; கவர்னர் அவ்வாறு செய்யவில்லை !

எதிர்க் கட்சித் தரப்பில் அந்த வாய்ப்பு இல்லையா என்று கேட்டால்—93 பேர்கள் கையெழுத்து மூலம், 'அமைச்சரவை அமைக்கத் தயார்' எனத் தெரிவித்திருந்தனர். தெரிவித்தது மட்டுமல்ல—93 பேர்களும் டெல்லிக்கு நேரில் வந்து குடியரசுத் தலைவர்முன் அணிவகுத்து நின்றனர் ; உள்

(3-ம் பககம் பார்க்க)

சனநாயகம் சீரழியும் போக்கில் செயல்படுகின்றனர் காங்கிரசார்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

துறை அமைச்சர்கூட அவர்களைப் பார்வையிட்டார்; ஆனால் அவர்கள் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை! கவர்னர் மவுனம் சாதித்தார்! சட்டமன்றம் மூடிக் கிடந்தது! சனநாயகத்தின் குரல் அடக்கப்பட்டிருந்தது! காங்கிரசுக் கட்சி பலம் சேர்த்து—ஆட்களை இழுத்து அமைச்சரவை அமைக்கும் வரையில் இந்த நிலைமை நீடித்தது!

சோகநாடகத்தின் இரண்டாவது அங்கம் துவங்கியது இங்கே!

சோக நாடகத்தின் இரண்டாவது காட்சி புதுச்சேரியில் 1967 மார்ச் 19-ம் நாள் ஆரம்பித்தது. காங்கிரசுக் கட்சியிலிருந்தவர்களில் ஒன்பது உறுப்பினர்கள்—அமைச்சர்களாக இருந்த திரு. காங்கேயன், திரு. வரதப் பிள்ளை உட்பட—காங்கிரசிலிருந்து விலகி, ஐக்கிய சனநாயக முன்னணி அமைத்தனர்; மார்ச் 20-ந் தேதி காலை, அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும் தந்தனர்; மார்ச் 20-ம் நாள் சட்டமன்றம் கூடியபொழுது, சபையில் 25 உறுப்பினர்கள் இருந்தனர்; எதிர்தரப்பில் 15 பேர்கள்—ஆளும் கட்சி சார்பில் 10 பேர்கள்!

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுக்காமலேயே, சபை கூடிய ஐந்து நிமிடத்துக்குள்ளாகவே, சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்டு விட்டது!

எதிர்தரப்பில், கவர்னருக்குக் கோரிக்கை அனுப்பப்பட்டது; அது கவனிக்கப்படவில்லை; பிறகு திரு. காமராசர் அவர்கள்......

ஓர் உறுப்பினர் :—"அவர் பெரிய சனநாயகவாதி ஆயிற்றே!"

இரா. செழியன் :—"பெரிய சனநாயகவாதியும், காங்கிரசுக் கட்சியின் தலைவராகவும் ஆன காமராசர், திரு. வெங்கடராமன் அவர்களைப் புதுச்சேரிக்கு அனுப்பிவைத்தார். திரு. வெங்கடராமன் அவர்கள் இப்பொழுது திட்டக் குழுவில் உறுப்பினராக இருக்கிறார். அப்பொழுது, காங்கிரசைத் திரும்ப ஆட்சிப்பீடத்தில் நுழைப்பது பற்றித் திட்டமிட, அவர், புதுச்சேரிக்கு அனுப்பப்பட்டார்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் உள்துறை அமைச்சர் சவாண் அவர்கள், "அரியானாவில் 'ஆயா ராம்' (உள்வரும் ராம்), 'கயா ராம்' (வெளியேறும் ராம்) என்று இரு பெயர்கள் உண்டாகி, விலை பேசப்பட்டது" எனக் கூறினார். அரியானாவில் 'ஆயா ராம்'—'கயா ராம்' இருப்பதாக அவர் தெரிவித்தார்; திரு. காமராசருக்கு ஒரு 'வெங்கடராம்' இருந்தார்; அவர் சென்று புதுச்சேரியில் காங்கிரசுக்கு சில 'ஆயா ராம்'களைக் கொண்டுவந்து, காங்கிரசை மீண்டும் அதிகாரத்தில் உட்கார வைத்தார்!

புதுச்சேரியில் மற்றொரு புதுமையும் நிகழ்ந்தது. வெங்கடசுப்பா ரெட்டியாரின் அமைச்சரவை கலைந்ததும், வேறு அமைச்சரவையும் இல்லாமல்—குடியரசுத் தலைவரின் ஆட்சியும் வராமல்—ஒரு நாள் கால அளவுக்குப் புதுச்சேரியில் 'அரசியல் சூனியம்' ஏற்பட்டிருந்தது!

ஆளுநர் என்ன—ஆரூடம் பார்ப்பவரா?

அரியானாவைப் பற்றிக் கவனிக்கலாம்; நேற்றைக்கு முன்னாள் பேசும்பொழுது, "கவர்னர் அறிக்கை, 'ஓர் அரசியல் தத்துவ விளக்கம்' என்று உள்துறை அமைச்சர் புகழ்ந்தார்; நானும் அந்த அறிக்கையை, ஒரு முறைக்கு இருமுறை படித்துப் பார்த்தேன்; அரசியல் தத்துவமோ, அரசியல் விளக்கமோ எதுவும் அதில் இருப்பதாகத் தெரியவில்லை; புரட்டிப் புரட்டிப் பார்த்தால், எதிர்காலத்தைப் பற்றிய ஆரூட விமர்சனம் கவர்னர் அறிக்கையில் நிரம்ப இருக்கிறது. கவர்னர் ஓரிடத்தில் கூறுகிறார் :—

"சட்டமன்றம் கூட்டப்பட்டால், ஆளும் கட்சி, எதிர்தரப்பு இருவரில் யார் பெரும்பான்மை பெற்றாலும் — அப்பொழுதுகூட நிலையான ஆட்சி பின்னால் கிடைக்கும் என்று கூறமுடியாது."

மற்றொரு இடத்தில் கவர்னர் தெரிவிப்பதாவது :—

"இப்பொழுதுள்ள சம்யுக்த தள அமைச்சரவையைக் காங்கிரசுக் கட்சி மற்றொரு கூட்டத்தின் துணையை வைத்து வீழ்த்தினாலும் வீழ்த்திவிடலாம்."

சட்டமன்றம் கூடினால், என்னென்ன நேரிடக்கூடும் என்று—எதிர்கால ஆரூடத்தைக் கவர்னர் கணிக்கிறார்!

எதிர்பார்ப்புகளைச் செய்வது தவறல்ல; ஆனால் அந்தச் சொந்த எதிர்பார்ப்புகளை வைத்து—அரசாங்க முடிவுகளை எடுத்து—கவர்னர், செயலில் ஈடுபட்டும்விட்டார்!

மத்திய அமைச்சர்களுக்குப் பக்கத்தில் ஒவ்வொரு பிரபல சோதிடர் இருப்பதாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அமைச்சரின் ஜாதகத்தைப்பார்த்து – மற்றவர்களின் ஜாதகங்களைப் பார்த்து—அமைச்சரின் பிரதம ஆலோசகராக சில ஜோசியர்கள் டெல்லியில் இருக்கிறார்கள்...

ஓர் உறுப்பினர் :— "ஹவேலி ராம்!"

இரா. செழியன் :—"ஹவேலி ராம் போன்றவர்கள்தான் இங்கே ஆட்சி முடிவுகளை எடுக்கிறார்கள்!"

அமைச்சர்களின் பக்கத்தில்தான் ஜோசியர்கள் இருக்கிறார்கள் என்றால், மாநிலத்துக் கவர்னர்களாகவும் ஜோசியர்கள் இருப்பது நமக்குத் தெரிகிறது!

கவர்னரின் அறிக்கை, ஏதோ ஜோசியம் பார்ப்பது — ஜாதகம் பார்ப்பது—கைரேகை பார்ப்பது —மை போட்டுப் பார்ப்பது போன்று இருக்கிறதே தவிர, அதில் அரசியல் முறையோ அரசாங்க வகையோ இருப்பதாகத் தெரியவில்லை!

'இராஜ பவன' முடிவா, சனநாயக முறை?

ஒரு கட்சிக்குப் பெரும்பான்மை பலம் இருக்கிறதா இல்லையா என்று பரிசோதனை செய்ய வேண்டிய இடம் சட்டமன்றம்தான்—கவர்னர் மாளிகை யல்ல!

ஒரு கட்சியின் பலத்தை நிர்ணயிக்க சட்டமன்றத்திற்குத்தான் உரிமை இருக்கிறதே தவிர, கவர்னரின் அறிக்கைக்குக் கிடையாது!

அரியானா நிலைமை பற்றி விளக்கிய கவர்னர் அறிக்கையில்கூட, அரியானா அமைச்சரவைக்குப் பெரும்பான்மை பலம் இருந்தது என்பதை அவரே ஒப்புக்கொள்கிறார்.

கவர்னர் அறிக்கையில் இறுதியில் இருப்பதாவது :—

"78 பேர்கள் உள்ள அரியானா சட்டமன்றத்தில், ராய் பீரேந்திரசிங் அமைச்சரவைக்கு 40 பேர்கள் இருக்கின்றனர்."

பெரும்பான்மை பலம் அமைச்சரவைக்கு இருந்தபோதிலும், சட்டமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது!

இராஜஸ்தானில் சட்டமன்றம் தள்ளிவைக்கப்பட்டுவிட்டது! புதுச்சேரியில் சட்டமன்றம் ஒத்திப் போடப்பட்டது! அரியானாவில் சட்டமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது!

மேற்கு வங்காளத்தில் ஓர் அமைச்சரவை நீக்கப்பட்டு, மற்றோர் அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது!

ஐக்கிய முன்னணி அமைச்சரவை நீக்கப்பட்டதற்குக் கவர்னர் கூறும் காரணமாவது :—

"சட்டமன்றத்தின் பெரும்பான்மை நம்பிக்கையை இழந்த ஓர் அமைச்சரவை ஆட்சியில் தொடர்ந்து இருப்பது என்பது அரசியல் சட்டத்துக்கு முரண்பட்டதாகும்."

இந்தக் காரணத்தைக் காட்டி, ஐக்கிய முன்னணி அமைச்சரவையை கவர்னர் கலைத்துவிட்டார்!

சட்டமன்றத்தின் பெரும்பான்மை பலம் இல்லாமல் ஓர் அமைச்சரவை இருக்கக்கூடாது என்பது உண்மையே; ஆனால் சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்கிறதா இல்லையா என்று யார் பார்ப்பது? கவர்னரா?—இல்லவே இல்லை! பெரும்பான்மை பலத்தை நிர்ணயிக்க வேண்டியது சட்டமன்றம்—சட்டமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்கள்!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடி சட்டமன்றத்தில் எடுக்கவேண்டிய முடிவை, கவர்னர் அவரது 'இராஜபவன'த்தில் இருந்துகொண்டு எடுத்துவிடலாம் என்று நினைப்பது, சனநாயக முறையல்ல!

இப்படியா ஒரு நிலைமை நாட்டில் உருவாவது?

தேர்தல் முறையை நாடாமல் — மக்கள் கூட்டத்தைச் சந்திக்காமல்—சட்டமன்றத்தைக் கலைக்காமல்—'கவர்னர் பெருமானை நம்பினால் போதும்; அமைச்சரவை அமைத்துவிடலாம்' என்ற நிலைமை இந்தியாவில் உருவாகியுள்ளது!

தேர்தல் போன்ற சனநாயக முறைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, ஒரு ஜோசியக்காரரை பிடித்துக் கவர்னராக்கினால் போதும்—அவர், ஜாதகங்களையும் நாள் நட்சத்திரங்களையும் கணக்கிட்டு யாரைச் சுட்டிக் காட்டுகிறாரோ — அவரை அமைச்சராக்கி ஆட்சியை ஒப்படைத்துவிடலாம்!

அடிப்படையையே தகர்த்துவிடுகிறதே!

கவர்னருக்குள்ள விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி அமைச்சரவையை நீக்கவும், மற்றொரு அமைச்சரவையை அமைக்கவுமான முறை இருக்கக்கூடாது என்பது எனது கருத்தாகும்.

'இது ஆபத்தானது' என்பது காங்கிரசுக்காரர்களில் சிலருக்கும் தெரிந்திருக்கிறது.

1965-ல் கேரளத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சி கொண்டுவரப்பட்டபொழுது, இந்த மாமன்றத்தில் எதிர்க் கட்சியினர் அதை எதிர்த்தனர்—ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதரித்தனர்.

இந்தப் பேரவையில் நடைபெற்ற விவாதத்தை நான் திரும்பப் பார்த்தபொழுது, காங்கிரசுப் பக்கத்திலிருந்து ஒரு குரல், நேர்மையாக வெளிவந்ததைக் கண்டேன்; அந்தக் காங்கிரசுப் பிரமுகர் கூறியதாவது :—

"அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள விதிமுறைகள்—அரசியல் சட்டத்தை உருவாக்கியவர் வகுத்த சனநாயகப் பண்பாடு—காப்பாற்றப்படவேண்டும் என்பதை இந்தப் பேரவையில் உறுப்பினராக உள்ள நாம் மறந்துவிடக் கூடாது. அவற்றுக்கு எந்தக் களங்கமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதும் நமது கடமையாகும்.

"நான் கூறுகிறேன்—வெளிப்படையாகவே கூறுகிறேன்—கேரளத்தில் கவர்னர் செய்தது, அரசியல் சட்டப்படி ஒரு மோசடியாகும். அரசியல் சட்டத்தின் அடிப்படையை அது தகர்த்துவிட்டது!

"யாருடைய தீர்ப்பு முடிவானதாக இருக்கவேண்டும்? கவர்னருடைய தீர்ப்பா, அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் தீர்ப்பா? இந்தக் கேள்விக்குப் பதில் கிடைத்தாக வேண்டும்.

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூட்டும்—அவர்கள் முடிவு செய்யட்டும்!

"அரசியல் சட்டத்தின் பாது காவலர்களாக நாம் இருக்கிறோம். அந்தப் பொறுப்பில், அரசியல் சட்டமுறையை முழுதாகப் பாதுகாக்க வேண்டும். அது செய்யப்பட்டுள்ளதா?—துரதிருஷ்டவசமாக, 'அது நடைபெறவில்லை' என்று நான் கருதுகிறேன்.

"கேரளத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிட்டது; எனவே இனிமேல் அது பற்றிப் பேசுவது, 'வெறும் பொழுது போக்கு' என்று சிலர் நினைக்கிறார்கள்; நான் அப்படி நினைக்கவில்லை; இதைப்பற்றி சிந்தித்தபடி மக்கள் இருப்பார்கள்!

"சர் ஐவார் ஜென்னிங்ஸ் அல்லது மாரிஸ் ஜோன்ஸ் போன்று அரசியல் சட்ட நிபுணர்கள் எதிர்காலத்தில் இந்திய அரசியல் வரலாற்றை எழுதும் பொழுது, நமது முடிவுகள், 'குற்றமுடையன' என்று எழுதக்கூடும்; 'மோசடி நிறைந்த முடிவு' என்று கூறக்கூடும்!

"சட்டமன்றத்தைக் கலைத்து, குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கேரளத்தில் கொண்டுவந்தது சரியல்ல!

இந்தக் கருத்தை வெளிப்படையாக இந்த மாமன்றத்தில் கூறியவர் திரு. ஆர். கே. கடில்கர்—இப்பொழுது தலைவராக இங்கே வீற்றிருப்பவர்தான்!

அவர் மிகத் தெளிவாகக் கேட்டார்—'கவர்னருடைய தீர்ப்பா—மக்கள் பிரதிநிதிகளுடைய தீர்ப்பா—எது முடிவானது?' என்று! அந்தக் கேள்வி இன்னமும் தொடர்ந்து வருகிறது.

'சக்ரவர்த்தி'களாகவே அவர்கள் ஆகிவிட்டனர்!

இராஜஸ்தானில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடி முடிவு காண அனுமதிக்கப்படவில்லை—கவர்னர் முடிவு எடுத்தார்!

புதுச்சேரியில், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், நம்பிக்கையில்லாத் தீர்மானம் தந்தனர்; சட்டமன்றம் ஒத்திப்போடப்பட்டது — கவர்னர் முடிவு எடுத்தார்!

அரியானாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் பெரும்பான்மை பலம் அமைச்சரவைக்கு இருந்தது; இருப்பினும், கவர்னர் முடிவு எடுத்தார்! சட்டமன்றமே கலைக்கப்பட்டுவிட்டது! அரியானாவில், கவர்னராக இருந்த திரு. பி. என். சகரவர்த்தி அதை ஒப்புக்கொண்டுள்ளார்!

முன்பு மகாராஜாக்கள்—சக்ரவர்த்திகள் நடந்துகொண்டதைப்போல், இந்தக் காலத்தில் கவர்னராக உள்ள சக்ரவர்த்திகள் எதேச்சாதிகாரப் போக்கில் நடந்துகொள்கின்றனர்!

சனநாயக உணர்வை அது பாதுகாத்துவிடாது!

அரசியல் சட்டப்படி எல்லாம் நடந்துள்ளதாகச் சிலர் வாதிடுகின்றனர். வாதத்திற்காக அதை ஒத்துக்கொண்டால்கூட, 'அரசியல் சட்டத்தில் உள்ள விதிகளை ஒட்டி அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள அதிகாரத்தைத்தான் கவர்னர் பயன்படுத்தினார்' என்று ஒத்துக்கொண்டால்கூட — நான் கூறுவது அரசியல் சட்ட முறை மட்டும் சனநாயக உணர்வைப் பாதுகாத்துவிடாது; அரசியல் சட்ட விதிகளைக் காட்டிக் கொண்டே சர்வாதிகாரத்தை நாட்டில் கொண்டுவந்துவிடலாம்.

எடுத்துக்காட்டாக, முதலாவது உலகப் போருக்குப்பின் ஜெர்மனியில் சனநாயக முறையில் சிறந்ததோர் அரசியல் சட்டம் தயாரிக்கப்பட்டது; அதை, 'வைமார் அரசியல் சட்டம்' என்று கூறுவார்கள்; அதன்மீது உண்டானதுதான் வைமார் குடியரசு!

வைமார் அரசியல் சட்டம், 'சனநாயக முறைகள் பொதிந்த ஒன்று' என அனைவரும் போற்றிப் புகழ்ந்தனர்; அந்த அரசியல் சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டுதான்—அதன் விதிமுறைகளை அமுல்படுத்துவதாகக் கூறியபடிதான் இட்லர் ஆட்சிபீடத்துக்குச் சென்று, சர்வாதிகாரியாக ஆனான்!

ஆக சனநாயகப் பண்பை மறந்து, அரசியல் சட்டத்தின் வரிகளை மட்டும் பயன்படுத்தினால், சர்வாதிகார ஆட்சி உதவியதாக முடியக்கூடும்!

உயிரைப் போக்கிவிட்டு உடலைப் பாதுகாப்பதா?

அரசியல் சட்டம் ஒரு வழி—குறிக்கோள் அல்ல! குறிக்கோள், சனநாயகம்!

சனநாயகப் பண்பாட்டைச் சாகடித்துவிட்டு, 'அரசியல் சட்டத்தைப் பாதுகாக்கிறேன்' என்று கூறுவது, உயிரைப் போக்கிவிட்டு உடலைப் பாதுகாப்பதற்குச் சமமாகும்!

இன்று காலை எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. முரசொலி மாறன் அவர்கள், இந்த அவையின் உறுப்பினராக உறுதிமொழி எடுத்தார். தென் சென்னைப் பாராளுமன்றத் தொகுதியிலிருந்து இடைத்தேர்தலில் வெற்றிபெற்று அவர் இங்கு வந்துள்ளார். இடைத்தேர்தலில், தி. மு. கழகத்தைத் தோற்கடிக்கக் காங்கிரசுக்காரர்கள் பெருமுயற்சி செய்தார்கள் என்று நான் கூறத் தேவையில்லை.

திரு. கருத்திருமன் அவர்கள்—முன்பு இங்கு ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தவர்—இப்பொழுது தமிழகச் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிறார்—அவர், தி. மு. க. அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரத் தயாராக இருந்தாராம்—'தென் சென்னைத் தேர்தலில் காங்கிரசு வெற்றிபெற்றுவிடும்' என்ற நம்பிக்கையில்; இதை அவர் ஒரு கூட்டத்திலேயே தெரிவித்திருக்கிறார்; ஆனால் அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக, தி.மு.க. உறுப்பினர் வெற்றிபெற்றுவிட்டார்.

பொதுத் தேர்தலில் 82 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற தி. மு. கழகம், இடைத் தேர்தலில், 1-இலட்சத்து 5-ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது!

ஏகாதிபத்தியவாதிகள் சென்ற பாதையில்...

நான் குறிப்பிட வந்தது, மற்றொரு முக்கியமான பொருள் பற்றி; அனைத்து இந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர், சென்னையில் பல தேர்தல் கூட்டங்களில் பேசும்பொழுது, 'இராணுவத்தை நாங்கள் இங்கே கொண்டு வருவோம்' என்று பேசியிருக்கிறார்—அவர் மட்டுமல்லாமல், மற்ற காங்கிரசுப் பேச்சாளர்கள்கூடப் பேசியிருக்கிறார்கள்—'உங்களிடம் போலீசு இருந்தால், எங்களிடம் இராணுவம் இருக்கிறது; இராணுவத்தைக் கொண்டுவருவோம்' என்று!

ஏதோ இராணுவம் இவர் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரக் காத்திருப்பதுபோல, காமராசர் பேசியிருக்கிறார்!

இராணுவம் இந்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. எல்லையைப் பாதுகாக்க—சீன ஆக்கிரமிப்பாளரை விரட்டியடிக்க—பாகிஸ்தான் பகையைச் சமாளிக்கப் பட்டாளம் இருக்கிறது! ஏழை எளியவர்களை—காங்கிரசுக்குப் பிடிக்காதவர்களை, சுட்டுத் தள்ள இரா

(4-ம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்றத்தில் செழியன் குற்றச்சாட்டு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

னுவம் அமைக்கப்படவில்லை......

துணைத் தலைவர் :—"கனம் உறுப்பினர் குறிப்பிடுவது கடுமையான குற்றச்சாட்டாகும்; அதற்கு ஆதாரம் இருக்கிறதா ?"

இரா. செழியன் :—"இருக்கிறது."

பி. இராமமூர்த்தி :—"காமராசர் பேசியது சென்னைப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது."

ஹிரேன் முகர்ஜி... ஹியோ நாராயண் :—"நாங்கள் படிக்கவில்லை."

இரா. செழியன் :—"இராணுவ ஆட்சி வந்துவிடும் என்று முன்பு காமராசர் கூறிக்கொண்டிருந்தார்."

மக்களுக்கு எதிராக — எதற்கெடுத்தாலும்—,இராணுவம், இராணுவம்' என்று கூறிக்கொண்டு, இராணுவத்தை நம்பி—இராணுவ பலத்தை நம்பி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளும் அந்தக் காலத்தில் இப்படித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள் !

அன்று அதற்கு வாதாடினர்---இன்று எதிராக இருக்கின்றனர்!

1937-ல் காங்கிரசுக் கட்சிப் பொதுத் தேர்தலில் ஈடுபட்டபொழுது, ஆறு-ஏழு மாநிலங்களில் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது; ஆனால், அமைச்சரவை அமைக்க மறுத்தது! கவர்னர் தனது விசேட அதிகாரங்களைப் பிரயோகிக்காமல் இருப்பதாக உறுதி தந்தாலன்றித் தாங்கள் ஆட்சி அமைக்கப்போவதில்லையெனக் காங்கிரசுக்காரர்கள் கூறினார்கள்.

1937 மார்ச்சில் கூடிய அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தில், ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு விதித்த நிபந்தனையில், 'அமைச்சரவையை மாற்றுவதிலோ, அமைச்சர்களின் அரசியல் சட்டபூர்வமான நடவடிக்கைகளில் குறுக்கிடுவதோ இல்லையென்று கவர்னர் உறுதிமொழி தந்தால், அதை வெளிப்படையாக அறிவித்துவிட்டு, காங்கிரசுக் கட்சி அமைச்சரவை அமைக்கலாம்" என்று கூறப்பட்டது.........

க. இராசாராம்:—"அந்தக் காங்கிரசு இப்பொழுது இல்லை; அது செத்து, மறைந்துவிட்டது !"

இரா. செழியன் :—பிரிட்டிஷ் மன்னரின் பிரதிநிதியாக வைசிராய் இங்கு இருந்தார். பிரிட்டிஷ் ஆட்சியின் நலன்களைப் பாதுகாக்க—கண்காணிக்க, மாநிலங்களில் கவர்னர்கள் நியமிக்கப்பட்டனர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சட்டமன்றத்திற்கு வந்தபொழுது, கவர்னரின் விசேட அதிகாரம் கவனத்துக்கு வந்தது; எனவே, 'தலையீடு கூடாது' என்று உறுதிமொழி கேட்டனர்.

அன்று எதற்காகக் காங்கிரசுக்காரர்கள் வாதாடினார்களோ, அதற்கு எதிராக இன்று இருக்கின்றனர்—நடந்துகொள்கின்றனர் !

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருந்த இடத்தில் காங்கிரசு ஏகாதிபத்தியம் வந்துள்ளது !

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கவர்னர்களைப் பயன்படுத்தியது போல், காங்கிரசு ஆட்சியும் கவர்னர்களைப் பயன்படுத்த முனைகிறது !

காங்கிரசுத் தலைவர்களிடம் காணப்படும் போக்கு!

காமராசர் துப்பாக்கியைப் பற்றிப் பேசுகிறார் !

அவர், ஓட்டுப் பெட்டியைப் பற்றிப் பேசவில்லை—வேட்டுச் சத்தத்தைக் கவனப்படுத்துகிறார் !

அவர், மக்களை நம்பவில்லை—இராணுவத்தை நம்புகிறார் !

அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டியின் தீர்மானத்தை ஆதரித்து காந்தியார் அவர்கள், 1937 மார்ச் 30-ந் தேதி ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் அவர் குறிப்பிட்டதாவது :—

பேச்சில் வெளியிட்டதை நடைமுறையில் நிறைவேற்ற பிரிட்டிஷ் அரசாங்கம் மறுக்கிறது! மக்களுக்கு மனபலம் உண்டாகி எதிர்க்கும் சக்தி பெறும்வரை, அவர்களை அடக்கியாள பிரிட்டிஷ் அரசாங்கம் முயலும் என்பதில் சந்தேகமில்லை! ஆனால் இது மாகாண சுயாட்சி ஆகாது!

"தேர்தலில் வெற்றி பெற்று வந்தவர்களின் கோரிக்கையை உதறித் தள்ளுவது, மாகாண சுயாட்சி தந்ததாகக் கூறுவதை மறுப்பதாகும்.

"இனிமேல் ஆட்சி என்பது, இராணுவ ஆட்சி! பேனாவின் ஆட்சியோ, பெரும்பான்மை பல ஆட்சியோ அல்ல!"

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எந்தப் போக்கைக் காந்தியார் கண்டித்தாரோ, அதேவிதப் போக்கு இன்று காங்கிரசுத் தலைவர்களிடம் காணப்படுகிறது !

பேனா முனையல்ல—துப்பாக்கி முனை ! ஓட்டு முறை அல்ல—வேட்டுமுறை ! மக்கள் அல்ல—இராணுவம்; இப்படிப் போகிறது இவர்களின் பேச்சுக்களும் எச்சரிக்கைகளும் !

சட்ட நிபுணர்களும் குற்றஞ்சாட்டுகின்றனரே !

சுப்ரீம் கோர்ட்டில் பணியாற்றும் 20 முக்கிய வழக்குரைஞர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை இன்று பத்திரிகையில் வெளிவந்துள்ளது; அதில், முன்னாள் தலைமை நீதிபதி கூட கையெழுத்திட்டுள்ளார்.

"சட்டமன்றத்திற்கு உள்ள உரிமையை, கவர்னர்கள் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டார்கள்"

என்று அந்தச் சட்ட நிபுணர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இது, இந்திய சனநாயக முறையின்மீது ஏற்பட்டுள்ள கடுமையான களங்கமாகும் !

எதேச்சாதிகாரத்துக்கு வழிகோலும் தனிப்பட்ட அதிகாரம் குறைக்கப்பட்டு — கட்டுப்படுத்தப்பட்டாலன்றி, சனநாயகத்துக்கு இந்தியாவில் நல்வாழ்வு கிடைக்காது !

சனநாயகம் நசுக்கப்பட்டு, அழிக்கப்படும் அவலநிலை உருவாகும் !

சனநாயகப் பண்பாட்டை உணர்ந்து, சனநாயகத்தைக் காப்பாற்ற, டில்லியிலுள்ள பெரியவர்கள் முன்வர வேண்டும்; இல்லையானால், 'ஐயோ! சனநாயகமே!' என்று கூறுவதைத் தவிர வேறு வழியில்லை !

முதல் முறையல்ல--மூன்றும் தடவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையில், நிஜலிங்கப்பாவைப் போட்டியிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பது, காமராசர் 'தலைமறைவாக' இருந்தபோதுதான் ! இதற்காகக் காமராசர் செய்தியாளர்களிடம் சிடுசிடுப்பைக் காட்டி இனி ஆகப்போவது ஒன்றுமில்லை !

'நானே காலையில் வந்து பார்க்கிறேன்' என்று காமராசர் கூறிச் சென்ற பின்னர் இந்திரா, தனது வீட்டில்—பாட்டீல், செகசிவன் ராம், பிரமானந்த ரெட்டி, பக்ருதின் அகமது ஆகியோர் சூழ இருந்து —நிஜலிங்கப்பாவை, தேர்தலில் நிற்க சம்மதிக்க வைத்திருக்கிறார் ! நிஜலிங்கப்பாவும் ஒத்துக்கொண்டிருக்கிறார் !

காமராசரின் கண்ணோட்டத்தின்படி, இந்திராவின் இத்தகைய அலட்சியப் போக்கு, சாதாரணமானது அல்ல—துணிவானது ! 'தலைவர்' என்ற முறையில் மட்டுமல்ல—'தனிப்பட்ட மனிதர்' என்ற வகையில் காமராசருக்கு இழுக்குக் காட்டும் செயல்தான் !

ஆனால், அப்படி ஒரு நிலை வளர்ந்தபின்னர், அதற்காக ஆயாசப்படுவதிலோ, ஆவேசப்படுவதிலோ பொருள் இல்லை !

ஒன்று—ஏற்பட்டுவிட்ட சரிவை, பெருந்தன்மையாக ஏற்றுக்கொள்ளலாம்! அல்லது, இந்திராவின் போக்குக்குத் துணை போகலாம் !

ஆனால், காமராசரோ, 'மீசையில் மண் ஒட்டவில்லை' என்று மட்டும் சொல்லவில்லை--'கோதாவில் ஜெயித்ததும் நான்தான்' என்று இல்லாததைக் கூறுகிறார் !

"நிஜலிங்கப்பாவுக்கு நான் டெலிபோன் செய்து, இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே இங்கே வரச் சொன்னேன்"

என்றோ,

"நிஜலிங்கப்பாதானே—அவரை நீண்ட நாட்களாகவே தெரியுமே ! எனக்கு நண்பராயிற்றே"

என்றோ,

"'வேட்பாளர்' என்றுதானே நிஜலிங்கப்பாவை சிபாரிசு செய்திருக்கிறார் இந்திரா—அவர் என்ன சொல்வது ?—அவர் எனது வேட்பாளரும்கூடத்தான்"

என்றெல்லாம் பேசி மனத்தைத் தேற்றிக்கொள்வதோ, கோபத்தைக் கொட்டிக்கொள்வதோ—கட்டுரையின் ஆரம்பத்தில் காட்டியுள்ளவாறு—சாதாரண குடும்பங்களில் நடக்கும் மாமியார் -- மருமகள் தகராறினைப்போலத்தான் இருக்கிறது !

பெருமைகள் சரிந்தாலும், புகழ் குறைந்தாலும், இன்னும் இரண்டு வார காலத்திற்குப் பதவியில் இருக்கவேண்டியவராகிறார் காமராசர்! இப்படி வெளிப்படையாகப் பேசி—உள்ளத்திலுள்ள கோபத்தினைக் காட்டி—பதவியின் புகழையும் பெருமையையும் சீர்குலைத்துவிட்டு அவர் திரும்பக்கூடாது !

'காங்கிரசு காடி'யில், தலைவர் தேர்தல்பற்றிய 'கலகலப்பு' டிசம்பர் 8-ம் நாள்வரையில் இருக்கும்; இதே தொடரில் அதனை அவ்வப்போது பார்ப்போம்.

—எஸ். ஆர்.

டிச. 15-ந் தேதி வெளிவருகிறது !

'விடிவானம்' [தி. மு. க. திங்கள் இருமுறை இதழ்]

ஆசிரியர் : அரியலூர் ஏ. நெடுமாறன்

இலக்கியப் பேழையாய் — அறிவுச் சுரங்கமாய் — கவிதைக் கொத்தாய்—கட்டுரைப் பெட்டகமாய்—கருத்துச் செறிவுள்ள கதைக் குவியலாய்—டிசம்பர் 15-ம் நாள் வருகிறது !

விலை 16 காசு -- முன்பணம் கட்டும் விற்பனையாளர் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி, 'விடிவானம்', 12, சௌராஷ்டிரா நகர், 2-ம் தெரு, சென்னை-24

காமராசர் வேதனை!

புதுடில்லி, டிச. 2—

"....என்ன நடந்ததென்றே எனக்குத் தெரியாது....இந்தப் பிரச்சினை (அ. இ. காங்கிரசுத் தலைவர் தேர்வுப் பிரச்சினை) அணுகப்பட்ட விதமே எனக்கு வேதனை அளிக்கிறது; ஒவ்வொருவரும் 'தனக்குப் பிடித்தவர்தான் வரவேண்டும்' என விரும்புகின்றனர்; கொள்கைகளைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை."

இவ்வாறு காமராசர், தலைமையமைச்சரின் இல்லத்தில் முக்கியக் காங்கிரசுத் தலைவர்கள் கூடி—தமக்கு ஒரு தகவலும் கொடுக்காமலே—காங்கிரசுத் தலைமைபற்றி முடிவு செய்ததையொட்டிக் கருத்தறிவிக்கையில், செய்தியாளர்களிடம் கோபத்துடன் கூறியுள்ளார்.

கலை நிகழ்ச்சி

கொளத்தூர் தி. மு. க. சார்பில் 3—12—67 இரவு 7-மணிக்கு பஸ் நிலையத் திடலில் வீ. சென்னியப்பன் தலைமையில், முருகு பாண்டியன் குழுவினரின் 'ஆண்ணாவின் ஆட்சி' எனும் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

3--12--67

நாகர்கோவில்

9-வது வட்ட தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு வடசேரி வரம் தெற்கு ரத வீதியில்; தலைவர் : ப. சொ முத்துக்குமாரசாமி; பேசுவோர்; அ. பொ. அரசு எம்.எல்.ஏ., வேலூர் டி. நாராயணன் எம்.ஏ.,பி.எல்., என். வீராசாமி எம்.எல்.ஏ., ஆர். என். அரங்கநாதன் பி.ஏ. பி.எல்.,எம்.எல்.ஏ., கே. ஏ. இராசப்பா, மற்றும் பலர்.

காரமடை

நகர தி. மு. க. சார்பில் மாலை 5-மணிக்கு காந்தி திடலில்; தலைவர் : ப. இராமசாமி; பேசுவோர் : அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா. மே. சி. தூயமணி, கு. தங்கவேலு பி.ஏ., பி.எல்., கா. இரா. அரங்கநாதன், மற்றும் பலர். (மாலை 4-30 மணிக்கு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களுக்கு வசந்த மண்டபத்தில் பேரூராட்சி மன்றத்தினரும், மருத்துவமனைக் குழுவினரும், எம். ஜி. ஆர். மன்றத்தினரும் வரவேற்பு அளிப்பர்.

காரைக்குடி

எழுச்சி மன்றம் சார்பில் தென் சென்னை இடைத் தேர்தல் வெற்றி விழா; இரவு 7-மணிக்கு காட்டுத் தலைவாசல் வாய்க்கால் பாதையில்; தலைவர் எஸ். வி. சுந்தரம் : பேசுவோர் : கா. இராசா முகமது பி.ஏ., சித. சிதம்பரம், மற்றும் பலர். (காலை 10-மணிக்கு முத்துப்பட்டணம் 2-வது வீதி எண் 18-ல் வி. நாச்சியப்பன் தலைமையில் மேற்படி மன்றத்தை கே. நாச்சியப்பன் திறந்துவைப்பார்).

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"மேற்கு வங்கக் கவர்னர், தமது பதவியைக் களங்கப் படுத்திவிட்டார்; மேற்கு வங்கத்தைத் துக்கத்திலும், அவமானத்திலும் ஆழ்த்திவிட்டிருக்கிறார் !

"கவர்னராக அனுப்பியபோது, தம்மிடம் குடியரசுத் தலைவர் வைத்திருந்த நம்பிக்கைக்கு மேற்கு வங்கக் கவர்னர் துரோகம் இழைத்துவிட்டார் !"

தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் தேர்தலில் சி. சுப்பிரமணியம் 'போட்டி'?

டிசம்பர் 15-ந் தேதியன்று நடைபெறவிருக்கும் தமிழகக் காங்கிரசின் தலைவர் தேர்தலில் சுப்பிரமணியம் 'போட்டி'யிடுவார் என்று இன்றைய காலைப் பத்திரிகை ஒன்று யூகம் தெரிவித்திருக்கிறது.

சுப்பிரமணியம் பங்கு கொள்ள இருப்பது 'போட்டி'யா அல்லது 'ஒருமனதான தேர்வா' என்பது யூகிக்க முடியாததாக இருக்கிறது !

ஏனெனில், 'தமிழ்நாடு காங்கிரசுக்குத் தலைவராக வருபவர்கள், காமராசரின் கருத்துக்கு ஒத்துவருபவராக இருக்க வேண்டும்' என்று கூறப்படுகிறது !

அப்படிப் பார்த்தால், சி. சுப்பிரமணியத்தை போட்டியின் மூலமோ, ஒருமனதாகவோ தலைவராக வர விடுவதற்குக் காமராசர், ஒப்புதலோ, ஒத்துழைப்போ தருவாரா என்பது சந்தேகம்தான் !

ஏனெனில், அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் தேர்தலுக்கு சி. சுப்பிரமணியத்தின் பெயர் அடிபட்டது மட்டுமல்லாமல், 'இந்திராவின் ஆதரவு இருந்தும் காமராசரின் ஒப்புதல் கிடைக்கவில்லை' என்றும் முன்னர் வந்த செய்தி ஒன்று இங்கு நினைவுகூரத்தக்கது.

முருகுபாண்டியன்

கலைநிகழ்ச்சி

டிச. 5: கொளத்தூர் (மேட்டூர்); 4: பங்களா புத்தூர் (கோவை); 5: பெருநிதலையூர் (ஈரோடு); 6: ஒலகடம் (பவானி); 7: திங்களூர் (கோபி); 8: ஈரோடு; 9: தாராபுரம்; 10: திருச்சி; 11: கோனேரிப்பட்டி; 12: பூலாம் பட்டி; 13, 15: சங்கரி; 16: தியாகதுருகம் (தெ. ஆற்காடு); 17: பாண்டிச்சேரி; 18, 19, 20: கடலூர் தொகுதி; 23: கருங்குழி; 24: செங்கற்பட்டு; 25: வாணியம்பாடி; 29, 30, 31: கோவை நகரம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)